முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1376

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

06.07.2023, வியாழக்கிழமை

1. பார்காக்கவந்த பரம்பொருளாக
பரம ஆனந்த சதாசிவ சற்குருவாக
வரம்பெற்று என் சக்தியாகவே
வாழுகின்ற ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர்யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 21 ம் நாள், 06.07.2023, வியாழக்கிழமை)
வரமென அரங்கன் திருவடி பற்றி
வையகத்தார் ஞானம் பயில
3. பயிலவே இந்த பேருலகம்
பாடிடுவேன் ஞானலோகமாக மாற்றம்
தயவான மக்கள் படையைக்கொண்டு
தரணியெங்கும் அரங்கன் சன்மார்க்க பலம்
4. பலமான ஞான பூமியாக
பழுதில்லாத ஞானவான்கள் படையுமாக
வலம் வந்து உலகமெல்லாம்
வையகத்தைக் காக்கும் ஞானிகள் ஆட்சி
5. ஆட்சியாக ஞானயுகமாற்றம்
ஆற்றல்பட அரங்கன் அவதாரத்தால் நடக்கும்
மாற்றம் செய்யவந்த மாதவசி அரங்கன்
மக்களை காத்திடும் மகா ஞானி
6. ஆற்றல் அறிந்து உணர்ந்து உலகோர்
அரங்கா முருகா என வேண்டி வர
வருகவே வையகத்தில் மாற்றம்
வளர்ச்சி நிலையாக சடுதி காணும்

7. தருகின்ற குணம் நிறைந்த மக்களாக
தயவுகொண்ட அருளாளர்களாக மக்களெல்லாம்
எல்லோரும் ஆற்றல்பெருக்கம் கண்டு
எங்கும் தயவும் தர்மநெறியும் பரவி
8. ஆங்காங்கே இல்லாமை என்கின்ற நிலைகள் அனைத்தும்
அறிவிப்பேன் மாற்றமாக உயர்சக்தியாகக்கூடி
கூடியே அருள்பலமிக்க ஆற்றல்மிக்க
குரு அரங்கன் தயவாலே அரங்கனின் வரத்தாலே
9. வையகமெல்லாம் ஞானபூமியாக மாற்றம் பெறும்
வருங்காலங்களில் பேரிடர் பிறதுன்பம் இல்லாத
பெரும் பாதுகாப்பு மிக்க பின்னடைவே இல்லாத
பொருள்வளம் கண்ட பூமியாக இந்த உலகம் மாறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—